நகராட்சி அலுவலகம், ஆத்தூர்,
(சேலம் மாவட்டம்),
நாள். 27.09.2023.

## அவசர கூட்டம்

அன்புடையீர்,

இந்நகர்மன்றம் செப்டம்பர்–2023 ஆம் மாத அவசர கூட்டம் வருகிற 29.09.2023 ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு தந்தை பெரியார் நகர்மன்ற கூட்டத்தில் நடைபெற உள்ளது. கூட்டபொருள்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. தாங்கள் தவறாமல் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

27/09/2023
தலைவர்.
ஆத்தூர் நகர்மன்றம்.

27/9/23

1.ஆத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 17வரையுள்ள பகுதிகளின் 103 ஆழ்துளை கிணறுகளின் மின்மோட்டார்கள் பொருத்தப்பட்டு குடிநீர் அல்லாத பயன்பாட்டிற்காக பொதுமக்களால் பயன்படுத்தப்பட்டுவருகிறது. மேற்படி மின்மோட்டார்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் பழுது நீக்கம் செய்யவும் மற்றும் பராமரிப்பு பணிகள் தொடர்ந்து செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.9.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

அலுவலகக் குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம், செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்

2. ஆத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.18 முதல் 33வரையுள்ள பகுதிகளின் 103 ஆழ்துளை கிணறுகளின் மின்மோட்டார்கள் பொருத்தப்பட்டு குடிநீர் அல்லாத பயன்பாட்டிற்காக பொதுமக்களால் பயன்படுத்தப்பட்டுவருகிறது. மேற்படி மின்மோட்டார்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் பழுது நீக்கம் செய்யவும் மற்றும் பராமரிப்பு பணிகள் தொடர்ந்து செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.9.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

அலுவலகக் குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம், செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்

3.ஆத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 17 வரையுள்ள பகுதிகளின் குடிநீர் குழாய்களில் ஏற்படும் உடைப்புகள் மற்றும் அடைப்புகள் குடிநீர் அல்லாத பயன்பாட்டிற்காக ஜி.ஐ குழாய்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் பழுது

நீக்கம் செய்யவும் மற்றும் ஆண்டு பராமரிப்பு பணிகள் தொடர்ந்து செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.9.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

அலுவலகக் குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம், செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்

4.இந்நகராட்சிக்கு சொந்தமான வார்டுஎண்21ல் நாராயணசாமி தெருவில் ஏற்கனவேயுள்ள ஆழ்துளை கிணற்றிலிருந்து ஜி.ஐ பைப் லைன் நீட்டிப்பு செய்து மற்றும் குடிநீர் பகிர்மான குழாய் அமைப்பதற்கு ஆகும், செலவினத்தொகை ரூ.2.10 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம், செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்

5. இந்நகராட்சிக்கு சொந்தமான வார்டுஎண்7ல் புதிய கல்லாநத்தம் ரோடு ராஜராஜன் நகரில் ஏற்கனவேயுள்ள ஆழ்துளை கிணற்றிலிருந்து ஜி.ஐ பைப் லைன் நீட்டிப்பு செய்து மற்றும் குடிநீர் பகிர்மான குழாய் அமைக்க அதற்கான செலவினத்தொகை ரூ.3.70 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம், செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்

6.ஆத்தூர் நகராட்சிக்கு மேட்டூர் –ஆத்தூர் கூட்டுக்குடிநீர் திட்டத்தின் கீழ் தினசரி வழங்கப்பட்டுவரும் 1000 லிட்டர்க்கான குடிநீர் கட்டணம் ரூ.16.00/KL வீதம் அரசாணை பிறப்பிக்கப்பட்ட மாதத்திலிருந்து உயர்த்தி வசூலிக்கப்படும் என்றும் மற்றும் வருடாந்திர உயர்வு 5% என்றும் குறிப்பிட்டுள்ள அரசாணை (Ms) எண்.120, நககாட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை,(WS–2)துறை, நாள்22.08.2023 ஐ மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப் படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மன்றம் பதிவு செய்யலாம், (ந.க.எண்.2937/2023/இ1)

8. ஆத்தூர் நகராட்சிக்குட்பட்ட நகரின் 4 இடங்களில் செயல்பட்டு வரும் நுன்னுயிர் செயலாக்க மையங்களில் புதியதாக Napkin Incinerator இயந்திரங்கள் அமைத்து தர துப்புரவு அலுவலர் அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, மேற்கண்ட ஏதேனும் ஒரு நுன்னுயிர் செயலாக்க மையத்தில் புதியதாக Napkin Incinerator இயந்திரங்கள் அமைத்து தர உத்தேச செலவினம் ரூ.1.90 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது

அலுவலகக் குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம், செலவினத்தை பெறப்படும் திடக்கழிவு மேலாண்மை திட்ட நிதி /அரசி திட்ட நிதி அல்லது வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்

------

9.ஆத்தூர் நகராட்சிக்கு SBM (U)2.0 2023–2024ம் ஆண்டிற்கான திட்டத்தின் கீழ் சமுதாய கழிப்பிடம் மற்றும் சிறுநீர் கழிவறைகள் ஆகியன புதியதாக அமைத்தல் பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் 5990/20222 /SBM2, நாள்08.09.2023ல் ரூ.24.96 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து வரபெற்ற கடிதத்தினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மன்றம் பதிவு செய்யலாம், (ந.க.எண்.3010/2023/இ1)

10. இந்நகராட்சி அலுவலகத்திலுள்ள தரை தளத்திலுள்ள கழிவறையின் நீர் கசிவை சரி செய்யவும் மற்றும் கழிவறையின் நுழைவு வாயில் முன் பகுதியில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கென தனி வழி ஏற்படுத்த அலுமினியத்தாலான தடுப்புகள் அமைக்கவும் மற்றும் ஆணையாளர் அறை வர்ணம் பூசி, மின் விளக்குகள் மாற்றி அமைக்கவும் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ள ஆகும், உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம், செலவினத்தை வருவாய் நிதிஅல்லது பெறப்படும் அரசின் திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்

11. ஆத்தூர் நகராட்சிக்குட்பட்ட நகரின் 4 இடங்களில் செயல்பட்டுவரும் நுன்னுயிர் செயலாக்கமையங்களில் உள்ள குப்பை பிரித்தெடுக்கும் மின் இயந்திரங்களிலுள்ள பிளேடுகள் , மின் ஒயர்கள், மின்மோட்டார்கள், ரோலிங் ஷெட்டர் கதவுகள், பி.வி.சி ஏர் பைப்கள் மற்றும் இதர அடிப்படை வசதி பணிகள் மேற்கொள்ளுமாறு துப்புரவு அலுவலர் அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, மேற்கண்ட இடங்களின் நுன்னுயிர் செயலாக்க மையங்களின் பழுதுகளை சரி செய்து மின் இயந்திரங்களை பயன் பாட்டிற்கு கொண்டுவர உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம், செலவினத்தை பெறப்படும் திடக்கழிவு மேலாண்மை திட்ட நிதி /அரசி திட்ட நிதி அல்லது வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்

12.இந்நகராட்சிக்கு சொந்தமான வார்டுஎண்5ல் இராமசாமி தெருவில் மழைநீர் வடிகால் மற்றும் அதனை சார்ந்த சாலை மிகவும் பழுதடைந்து அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் சென்று வர மிகவும் சிரமமாக உள்ளது. எனவே மேற்படி மழைநீர் வடிகால் மற்றும்

அதனை சார்ந்த சாலையினை சீரமைக்க வேண்டியுள்ளதால் அதற்கான செலவினத்தொகை ரூ.1.50 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம், செலவினத்தை வருவாய் நிதி அல்லது பெறப்படும் அரசின் திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்

13. இந்நகராட்சிக்கு சொந்தமான வ.உ.சி.நகர் தெற்குகாடு பள்ளியின் இடது புறமுள்ள கட்டிடத்தின் மேல் தளத்தில் பழுதுடைந்துள்ள நிலையில் உள்ள Weathering course மாற்றி அமைக்கவும், ஜன்னல்களில் ஏற்படுள்ளள விரிசல்களை சரிசெய்யவும், தேவையான மின் வசதி மற்றும் மின் விளக்குகள் பொருத்தவும், டேபிள், சேர் வாங்கவும், புதியதாக LED TV வாங்கவும், கட்டிடத்திற்கு புதியதாக வர்ணம் பூசி புதுப்பிக்கவும் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.4.50 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது

அலுவலகக் குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம், செலவினத்தை கல்வி நிதி அல்லது பெறப்படும் அரசி திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்

14. இந்நகராட்சி பொது சுகாதாரபிரிவிற்கு Pulvarizer Machine. Electrical weighing Machine 1000 Kg Capacity மற்றும் மரம் அறுக்கும் இயந்திரம் ஆகியன வாங்கி தர தரகோரி இந்நகராட்சி துப்புரவு அலுவலரால் கோரப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி இயந்திரங்கள் வாங்க ஆகும், செலவினத்தொகை ரூ.5.40 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம், செலவினத்தை பெறப்படும் திடக்கழிவு மேலாண்மை திட்ட நிதி / அரசி திட்ட நிதி அல்லது வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்

15. ஆத்தூர் நகராட்சிக்கு சொந்தமான மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளுக்கு காவலர் பணி மற்றும் நகர்முழுவதும் உள்ள மின்மோட்டார்களை இயக்குதல் ஆகிய பணிகளை இது நாள்வரை அலுவலக பணியாளர்கள் வாயிலாக செய்யப்பட்டு வந்தது. தற்சமயம் ஆழ்துளை கிணறுகள் மற்றும் 9 மேல் நிலை நீர்தேக்க தொட்டிகள் ஆகியன ஆத்தூர் நகராட்சியில் உள்ளதால் ஏற்கனவே பணி செய்த பொறியியல் பிரிவு பணியாளர் வயது முதிர்வு காரணமாக பணியிலிருந்து ஒய்வு பெற்றறுள்ளதால் குடிநீர் சம்மந்தமான பணிகளை தொடர்ந்து கண்காணித்து வர குடிநீர் பணியாளர் ஒருவரும் இல்லை. எனவே குடிநீரின் அத்தியாவசியமான மேற்படி பணிகளை கவனிக்கவும் ஒருங்கிணைப்பு செய்ய ஒருபணியாளர் மற்றும் குடிநீர் கட்டணங்கள் வசூல் செய்ய இரு பணியாளர்கள் (Out sourcing) ஒப்பந்த அடிப்படையில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் விலை விகிதத்தில் 6 மாதங்களுக்கு பணியில் அமர்த்திக்

கொள்ள ஆகும் செலவினத்திற்கு ரூ.3.75 இலட்சத்திற்கு மன்ற அனுமதிக்கு மன்றப்பொருள் வரைவு ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம், செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்

16.இந்நகராட்சி பொது சுகாதாரபிரிவிற்கு கீழ் காணும் உபகரணங்களை பதியதாக வாங்கி தருமாறும் தனது கடிதத்தில் இந்நகராட்சி துப்புரவு அலுவலரால் கோரப்பட்டுள்ளது

| S.I | Descrippion | Nos |
|---|---|---|
| 1 | Hand Fogging Machine(Indoor Foging) | 5 |
| 2 | Pulse Fogging | 3 |
| 3 | Hand Sprader | 3 |
| 4 | Hand Fogging Machine Cylinder | 100 |

மேலும் மேற்படி பொதுசுகாதரா நலனை கருத்தில் கொண்டு பணியின் அவசர அவசர அவசியம் கருதி தற்சமயம் கீழ்காணும் உபகரணங்கள் மட்டும் வாங்க ஆகும் ஆகும், செலவினத் தொகை ரூ.4.60 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம், செலவினத்தை பெறப்படும் திடக்கழிவு மேலாண்மை திட்ட நிதி /அரசி திட்ட நிதி அல்லது வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்

17. ஆத்தூர் நகராட்சிக்கு சொந்தமான பைத்தூர் ரோடு உரகிடங்கில் Blomining பணி நடைபெற்று வருவதால் மேற்படி பகுதிகளில் சமூக விரோதிகளால் சமூக விரோத செயல்கள் நடைபெறுகிறது எனவே மேற்படி பகுதிகளில் சுற்று சுவர் இல்லாமல் உள்ளதால் தற்காலிக ஜி.ஐ சீட் கொண்டு தடுப்பு அமைத்து சமூக விரோத செயல்கள் நடைபெறாதவாறு தடுக்க சுமார் 215 மீட்டர் நீளத்திற்கு 1:80 மீட்டர் உயரத்திற்கு பாதுகாப்பு வேலி அமைக்க ஆகும், உத்தேச செலவினத்தொகை ரூ.11.75 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம், செலவினத்தை பெறப்படும் திடக்கழிவு மேலாண்மை திட்ட நிதி /அரசி திட்ட நிதி அல்லது வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்

18. இந்நகராட்சிக்கு சொந்தமான வார்டுஎண்32ல வ.உ.சிநகர் கிழக்கு மாரியம்மன் கோவில் அருகில் மற்றும் கோகிலா லே– அவுட் பகுதிகளில் NSMT 2023–2024ம் ஆண்டிற்கான திட்டத்தின் கீழ் சாலை பணிகள் மேற்கொள்ள இருப்பதால் பழுதடைந்துள்ள ஜி.ஐ பைப் லைன் பழுது நீக்கம் மற்றும் பி.வி.சி பகிர்மான குழாய் அமைத்து பைப் லைன் நீட்டிப்பு செய்தல் பணிக்கு ஆகும், செலவினத்தொகை ரூ.1.45 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம், செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்

19.இந்நகராட்சிக்கு சொந்தமான பழைய பேருந்து நிலையத்திலுள்ள பழுதடைந்த பழைய வணிக வளாக கடைகளை இடித்து விட்டு புதியதாக வணிக வளாக கடைகள் மற்றும் இதர வசதிகள் மேற் கொள்ள அரசு ஆணை(4D) எண்23, நாள்01.12.2022ல் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2022–2023ம் ஆண்டிற்கான (KNMT) திட்டத்தின்கீழ் ரூ.3.76 கோடிக்கு நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி புதியதாக வணிக வளாகம் கட்டும் பணியானது தற்சமயம் நடைபெற்று வருகிறது. மேற்படி பணிக்கு அடிதளம் அமைக்கு பணி மேற்கொண்டு வரும் நிலையில் அப்பகுதியில் தரை மட்டத்திற்கு கீழே ஏற்கனவே உள்ள சிமெண்ட் கான்கிரிட்டால் ஆன தளத்தினை அப்புறப்படுத்தினால் மட்டுமே புதியதாக அடிதளம் அமைக்க இயலும். ஆனால் இக்கான்கிரிட் தளத்தை அப்புறப்படுத்த மேற்கண்ட மதிப்பீட்டில் வழி வகை இல்லை. அதன்படி, பூமிக்கு அடியிலுள்ள சுமார் 204 கன அடி சிமெண்ட் கான்கிரிட்டால் ஆன தளத்தினை அப்புறப்படுத்தி மேற்படி வணிக வளாக கடைகள் அமைக்க தயார் செய்துள்ள மதிப்பீடுத்தொகை ரூ.7.33 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம், செலவினத்தை வருவாய் நிதி அல்லது பெறப்படும் அரசின் திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்

20. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.11ல் பேருந்து நிலையம் அருகில் நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் பழக்கடைகள் மற்றும் வெற்றிலை மார்கெட் ஆகிய இரண்டு பணிகளுக்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளளது.

| வ.எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடுத் தொகைரூ. (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்கு சொந்தமான வார்டு டி, பிளாக் எண் 18, சர்வே எண் 3ல் புதியதாக பழக்கடைகள் அமைத்தல் பணி | 119.00 |
| 2. | நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்11ல் புதியதாக வெற்றிலை மார்க்கெட் கட்டுதல் பணி | 76.00 |

மேலும் இப்பணிகளுக்கு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளுவதற்காக கடைகள்மற்றும் மார்கெட் அமையப்பட உள்ள இடத்திற்கான மண்பரிசோதனை செய்யவும், Structural Design,

வரைப்படங்கள் போன்றவை தயார் செய்ய தனியார் கலந்தாலோசகர் (Private Consultant) மூலம் திட்ட பிரேரணைகள் தயார் செய்ய மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலககுறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம், செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

21. ஆத்தூர் நகராட்சிக்கு சொந்தமான மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளுக்கு காவலர் பணி மற்றும் நகர் முழுவதும் உள்ள மின்மோட்டார்களை இயக்குதல் ஆகிய பணிகளை ஏற்கனவே ஒப்பந்த பணியாளர்கள் (Out sourcing) முறையில் குடிநீர் விநியோகப்பணி மேற் கொள்ளப்பட்டுவருகிறது. தற்போது ஒப்பந்த பணியாளர்களின் ஒப்பந்த காலம் (Out sourcing) 31.10.2023ல் முடிவடைய உள்ளதால் (Out sourcing) ஒப்பந்த அடிப்படையில் பொதுப்பணி துறை தரப்படுத்தப்பட்ட விலை விகித அட்டவனை 2023–2024ன் விபர விகிதத்தில் 12 பணியாளர்களை 01.11.2023 முதல் 31..01.2024 முடிய 3 மாதங்களுக்கு பணியில் அமர்த்திக் கொள்ள ஆகும் செலவினம் ரூ.7.85 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப் படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம், செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

22. ஆத்தூர் நகராட்சி பகுதியில் உள்ள வார்டு –இ, பிளாக்–11, நகரளவை எண்.59/1,2,3 அமைந்துள்ள அனுமதியற்ற பெயரிடப்படாத மனைப்பிரிவில் தென்மேற்கு பகுதியில் உள்ள கீழ்காணும் அளவுள்ள சாலையினையும் ,மனைஎண் 3,7–இல் மேற்கு பகுதியில் 5 அடி அகலமும் ,86 அடி நீளமும் இந்நகராட்சிக்கு தானமாக வழங்குவதற்கு திரு.V.G.செந்தில் குமார், திருமதி B.தீபா, திருமதி v. சசிகலா என்பவர்கள் வரைவு தானப்பத்திரம் வழங்கியுள்ளனர்.

<u>அயிட்டம்–1 –ற்கு நான்கு எல்லைகள் விபரம்</u>

வடக்கு–23 அடி சாலை
தெற்கு–சசிகலா நிலம்
கிழக்கு– மனைஎண் 3,7 தானமாக வழங்க உள்ள 5 அடி சாலை
மேற்கு– மனைஎண் 2
இதில் கி.மே 20 அடியும், தெ.வ 86 அடி கொண்ட சாலை

<u>அயிட்டம்–2 –ற்கு நான்கு எல்லைகள் விபரம்</u>

வடக்கு– மனைஎண் 3–இல் தானமாக எழுதவுள்ள அயிட்டம்–3
தெற்கு– சசிகலா நிலம்
கிழக்கு– மனைஎண் 7
மேற்கு– தானமாக எழுதவுள்ள அயிட்டம்–1
இதில் கி.மே 5 அடியும், தெ.வ 36 அடி கொண்ட மனை (மேற்கு பகுதி)

<u>அயிட்டம்–3–ற்கு நான்கு எல்லைகள் விபரம்</u>

வடக்கு–23 அடி சாலை
தெற்கு –மனைஎண் 7–இல் தானமாக எழுதவுள்ள அயிட்டம்–2

கிழக்கு– மனைஎண் 3 ,
மேற்கு– தானமாக எழுதவுள்ள அயிட்டம்–1
இதில் கி.மே 5 அடியும், தெ.வ 50 அடி கொண்ட மனை (மேற்கு பகுதி)

அயிட்டம்–1 –இல் உள்ள 20 அடி சாலையின் அகலம் மிக குறைவாக உள்ளதால் பின்னிட்டு வரும் நாட்களில் அவர்களின் குடும்ப சுப/துக்க நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கும், வாகனங்கள் செல்வதற்கும் கட்டிடபணி மேற்கொள்வதற்கும் சிரமமாக அமையும் என்பதால் திருமதி B.தீபா, திருமதி V. சசிகலா என்பவர்கள் அவர்களுக்கு சொந்தமான மனையில் மேற்கு பகுதியில் 5 அடி அகலத்திற்கு 86 அடி நீளத்திற்கு தானமாக வழங்க முடிவு செய்துள்ளனர்.

அயிட்டம்–1 –இல் உள்ள 20 அடி சாலையும், அயிட்டம்–1,2 இல் உள்ள மனையும் அனுமதியற்ற பெயரிடப்படாத மனைப்பிரிவில் அமைகிறது. மேலும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட முழுமைத் திட்டத்தில் விரிவான திட்டபகுதியில் அமைவதால். (D D plan-2) மேற்கண்ட மூன்று அயிட்டங்களை நகராட்சிக்கு தாணமாக பெறுவதற்கு முன் உள்ளூர் திட்டக் குழுமத்தின் அனுமதி கோரப்படுகிறது..

**அலுவலககுறிப்பு ;**

அரசால் அங்கீகரிக்கப்பட்ட முழுமைத் திட்டத்தில் விரிவான திட்டபகுதியில் அமைவதால். (D D plan-2) எதிர்கால நலனை கருத்தில் கொண்டு மேற்கண்ட மூன்று அயிட்டங்களும் தாணமாக பெற்று கொள்வதற்கு உள்ளூர் திட்டக் குழுமம் அனுமதி அளிக்கலாம்.

**ந.க.எண்.2921/2023/எப் 1**

**23.** ஆத்தூர் நகராட்சியில் 2022–2023 ஆம் ஆண்டிற்கான தணிக்கை நடைபெற்றதற்கு தணிக்கை துறைக்கு தேவையான ஆவணங்கள் ஜெராக்ஸ் எடுக்கவும், பைண்டிங் செய்வதற்கான உத்தேச செலவின தொகை ரூ.22000 வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது

அலுவலக குறிப்பு ;

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.கஎண்.193/2018/அ5**

24. இந்நகராட்சிக்கு சொந்தமான அண்ணாகலையரத்தில் திருமணம், திருமன வரவேற்பு, காதணி விழா, மஞ்சள் நீராட்டு விழா, வளைகாப்பு நிகழ்ச்சி, ஜவுளி விற்பனை, வீட்டு உபயோக பொருட் காட்சி, பள்ளி ஆண்டுவிழா மற்றும் இதர நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு கீழ்கண்டவாறு 01.10.2023 முதல் வாடகை மற்றும் முன் வைப்புத்தொகை செலுத்த அதற்கான நிபந்தனைகள் மன்றத்தின்ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது

| வ. எண் | நிகழ்ச்சிகள் விபரம் | முன்வைப்புத் தொகை ரூ. | ஒருநாள் வாடகை ரூ. | காலம் |
|---|---|---|---|---|
| 1 | திருமணம் (கலையரங்கம் நிகழ்ச்சிக்கு எடுத்து கொண்ட நேரத்திலிருந்து 24 மணி நேரத்திற்கு மட்டும்) | 75000 | 50000 | 24 மணி நேரம் |
| 2 | கூடுதலாக 12 மணி நேரம் தேவை எனில் அதற்கான முன்அனுமதி. | 15000 | 10000 | 12 மணி நேரம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | வளைகாப்பு, காதணிவிழா, மற்றும் மஞ்சள் நீராட்டு விழா,வளைகாப்பு விழா,மகளிர் குழு கூட்டம், நடன அரங்கேற்ற நிகழ்ச்சி (ஒருநாள் நிகழ்ச்சி) | 40000 | 25000 | 12 மணி நேரம் |
| 4 | (Sale) கண்காட்சி ஜவுளி விற்பனைக்காக நடத்தப்படும் பொருட்காட்சி | 100000 | 15000 | 24 மணி நேரம் |
| 5 | இலவச மருத்துவ முகாம் இலவச விழிப்புணர்வு நிகழ்ச்சி. | 20000 | 12000 | 12 மணி நேரம் |
| 6 | அரசியல் கட்சி சம்மந்தமான விழாக்கள். | 20000 | 12000 | 12 மணி நேரம் |
| 7 | பள்ளி ஆண்டு விழா, அரசு விழாக்கள். | 20000 | 12000 | 12 மணி நேரம் |
| 8 | தொண்டு நிறுவன சமுதாய கூட்டம், பணி நிறைவு பாராட்டு விழா, பயிற்சி நடத்துதல், பால் சொசைட்டி கூட்டம், காந்தி ஜெயந்தி விழா, திருவிளக்கு பூஜை | 20000 | 12000 | 12 மணி நேரம் |

நிபந்தனை குறிப்பு

1.மண்டபம் முன்வைப்பு தொகையினை வங்கி வரைவோலையாக ஆணையாளர் ஆத்தூர் நகராட்சி என்ற பெயரில் நிகழ்ச்சிக்கு 15நாட்கள் முன்னதாக அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

2.Initial payment சுத்த கட்டணம் ரூ.5000/– வசூலிக்கப்படும் முன்னரே செலுத்த வேண்டும். மின்கட்டணம் ஒரு யூனிட்டுக்கு ரூ.25/– வீதம் வசூலிக்கப்படும்.

3.சேவை வரி 18% (மொத்த தொகையில்) சதவீதம் வசூலிக்கப்படும். மேலும் அரசு அவ்வப்போது அறிவிப்பிற்கு ஏற்றவாறு சேவை வரி வசூலிக்கப்படும். இவைகளை தனியாக செலுத்தப்பட வேண்டும்.

4.திருமண மண்டபம் நிழ்ச்சிக்கு ஒதுக்கீடு செய்ய முன் வைப்புத்தொகை செலுத்திய பின்னர் எதிர்பாராத விதமாக மனுதாரால் நிழ்ச்சி முன் பதிவினை ரத்து செய்ய தாமாகவே முன்வந்து 15 தினங்களுக்குள் இருக்க கோரினால் செலுத்திய தொகையில் 50 சதவீதம் மட்டுமே திரும்ப வழங்கப்படும். 7 தினங்களுக்கு முன் கோரினால் 25 சதவீதம் மட்டுமே திரும்ப வழங்கப்படும். 7 தினங்களுக்கு குறைவான நாட்களில் கோரினால் எக்காரணத்தை கொண்டும் செலுத்திய தெகையினை திரும்ப வழங்க இயலாது.

5.திருமண மண்டபம் முன்பதிவு செய்வதற்கு குறைந்தது 3 முதல் 30 நாட்கள் கால இடைவெளியில் முன்பதிவு செய்யப்படும்.

6.முன்பதிவு செய்யப்படும் பயனாளி ஆதார் அடையாள அட்டை, புகைப்படம், குடும்ப அட்டை, இருப்பிடச்சான்று இவை அனைத்தும் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னரே திருமண மண்டபம் முன்பதிவு செய்யப்படும்.

7.சுபகாரியங்கள் நிகழ்ச்சி ஒருநாள் என்பது முதல் நாள் பிற்பகல் 2.00 மணி முதல் மறுநாள் பிற்பகல் 2.00 மணி வரையாகும். இது ஒரு நாள் நிகழ்ச்சிக்கு ஒதுக்கப்படும் காலமாகும்.

8.கண்காட்சி, ஜவுளி வியாபாரம் விற்பனை ஆகியவைகளுக்கு அதிகபட்சம் 15 தினங்களுக்கு மட்டும் அனுமதி வழங்கப்படும். கூடுதலாக விற்பனை செய்ய தேவைப்பட்டால் மீண்டும் அனுமதி பெறப் பட வேண்டும்.

9.கலையரங்கத்தை பயன்படுத்தும்போது கலையரங்கத்தில் உள்ள பொருட்களுக்கும், கட்டிடத்திற்கும் மற்றும் மின்சார சாதனங்களுக்கும் எவ்வித சேதாரமும் விளைவிக்கக் கூடாது. மேலும் உட்புற மற்றும் வெளிப்புற சுவர்களில் விளம்பரங்கள் மற்றும் சித்திரங்கள் எழுதவோ, ஒட்டவோ கூடாது.

10.கலையரங்கத்தில் உள்ள பொருட்களுக்கும் மற்றும் கட்டிடங்களுக்கும் ஏதேனும் சேதாரம் ஏற்பட்டால் அதற்குண்டான செலவுத் தொகை முழுவதும் மனுதாரரால் செலுத்தப்பட்ட முன்பணத் தொகையில் இருந்து பிடித்தம் செய்யப்படும்.

10.அனுமதிக்கப்பட்ட நிகழ்ச்சிகளில் சமூக கேடு மற்றும் தடை செய்யப்பட்ட நிகழ்ச்சிகள் இருக்க கூடாது.அவ்வாறு ஏதேனும் புகார் மற்றும் ஆய்வு செய்த போது கண்டறிப்பட்டால் பொது நலன் மற்றும் நிர்வாக நலன் கருதி எவ்வித முன்னறிவிப்பு இன்றி கொடுக்கப்பட்ட அனுமதியை ரத்து செய்ய ஆணையாளருக்கு முழு அதிகாரம் உண்டு.செலுத்திய தொகை திரும் வழங்கப்பட மாட்டாது.

11.கலையரங்கம் பயன்படுத்தும்போது மனுதாரரே தங்களது உடைமைகளை பாதுகாத்துக் கொள்ள வேண்டும். அதில் ஏற்படும் இழப்புகளுக்கு நகராட்சி எவ்விதத்திலும் பொறுப்பு ஏற்காது.

12.கலையரங்கம் ஒதுக்கீடு செய்த நாட்களில் பொதுமக்களுக்கும், நகராட்சி அலுவலகத்திற்கும் காலை 9.30 மணி முதல் மாலை 6.00 மணி வரை இடையூறு ஏற்படா வண்ணம் ஒலி பெருக்கி சாதனம் அமைக்க வேண்டும். மேலும் ஒலிபெருக்கி சாதனம் உபயோகிப்பதற்கான உரிமம் காவல் துறையினரிடமிருந்து மனுதாரரே தனது சொந்த செலவில் பெற்றுக் கொள்ள வேண்டும்.

13.மனுதாரால் எந்த நிகழ்ச்சிக்கு திருமணமண்டபம் முன் பணம் செலுத்தி பதிவு செய்யப்பட்டதோ அந்த நிகழ்ச்சி மட்டுமே நடத்த அனுமதிக்கப்படும். வேறு நிகழ்ச்சி நடத்த அனுமதிக்கப்பட மாட்டாது.

14.திருமண மண்டபம் முன்பதிவு செய்யும்முன் திருமண மண்டபத்தில் உள்ள வசதிகளை நன்கு அறிந்த பின்பே முன்பதிவு செய்யப்பட வேண்டும்.

15.நிகழ்ச்சி நடைபெறும் காலங்களில் திருமண மண்டபத்தில் எதிர்பாராத விதமாக மின்தடை மற்றும் குடிநீர் சம்மந்தமான நிகழ்வுகள் தடைபட்டால் மனுதாரரின் தங்களது சொந்த செலவில் சரி செய்து கொள்ள வேண்டும்.

16.நகராட்சி நிர்வாகம் மின்சாரம் மற்றும் இதர வசதிகளுக்கு பொறுப்பு ஏற்காது.முன்பகுதியில் பந்தல் மற்றும் வாழை மரங்கள் தங்கள் சொந்த செலவில் நிகழ்ச்சி முடிந்த பின்னர் அன்றே எடுத்து செல்ல வேண்டும்.

17.திருமண மண்டபத்தில் மேடை அலங்காரம் மற்றும் மின்விளக்கு அலங்காரங்கள் தங்களது சொந்த செலவில் செய்து கொள்ள வேண்டும்.

உபகரணங்கள் மற்றும் இதர நிகழ்ச்சிகளுக்கு பாதுகாவலர்கள் தனியாக வழங்க இயலாது அனைவரின் நினைவுபடுத்தக் கொள்ள வேண்டும். இதற்கு நிர்வாகம் பொறுப்பு ஏற்காது.

நிகழ்ச்சி நடத்துபவர் திருமண மண்டபத்தில் என்னென்ன வசதிகள் உள்ளது என்று கேட்டறிந்து கொள்ளவேண்டும். ஏற்கனவே என்ன வசதிகள் உள்ளதோ அதை மட்டும் ஏற்றுக் கொள்ள வேண்டும் வேறு எவ்விதமான கூடுதலாக நிகழ்ச்சிக்கு ஏதுவாக நகராட்சியால் தயார் செய்து தர இயலாது.

20. நிகழ்ச்சி நடத்துபவரால் என்ன தேதிக்கு நிகழ்ச்சி நடத்த பதிவு செய்யப்பட்டதோ அன்றைய நாள் மட்டுமே திருமண மண்டபத்தினை பயன்படுத்த அனுமதிக்கப்படுவர் மற்றும் நிகழ்ச்சி முடிந்த பின்னர் என்ன தேதியை பதிவு செய்யப்பட்டதோ அன்றே மண்டபத்தினை காலி செய்து தரப்பட வேண்டும். கூடுதலாக மண்டபத்தினை பயன்படுத்த காலம் எடுத்துக்கொள்ள அனுமதி கிடையாது.

21. எந்த விதத்திலும் அம்மா கலையரங்கத்தில் இலவசமாக நிகழ்ச்சி நடத்துவதற்கு அனுமதிக்கப்பட இயலாது.

அலுவலகக் குறிப்பு- மன்றம் அனுமதி வழங்கலாம்.

25. ஆத்தூர் நகராட்சிக்கு சொந்தமான ஆணையாளர் குடியிருப்பில் பழுதடைந்து தண்ணீர் கசிவு ஏற்பட்டுள்ளதை பழுது நீக்கம் மற்றும் சீரமைத்தல் பணிகள் மேற்கொள்ளவும், பழுதடைந்து உள்ளவைகளை மாற்றி புதியதாக பிவிசி டேங்க், பைப் லைன், வயரிங் பணிகள், கதவு மராமத்து வால்வேஷர், சேர் டேபிள், சோபா மின் சாதனங்கள் மற்றும் தேவையான பொருட்கள் ஆகியன புதியதாக வாங்குவதற்கு நகர்மன்றம் தீர்மானம் எண் 778, நாள் 31.08.2023ல் ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு அனுமதி வழங்கியதன் பேரில் மேற்படி பணிக்கு 20.09.2023ல் மின்னணுவில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ் கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளிகள் விவரம் | சதவீதம் அதிகம்/குறைவு |
|---|---|---|
| 1 | திரு.ஆர்.செல்லக்கண்ணு ஒப்பந்ததாரர், ஆத்தூர். | 0.03 % குறைவு |
| 2 | திருமதி.டி.பழனியம்மாள் ஒப்பந்ததாரர், ஆத்தூர். | 0.56 % அதிகம் |

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.ஆர்.செல்லக்கண்ணு, ஒப்பந்ததாரர் ஆத்தூர் என்பவரின் 0.03 % மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்து உள்ளதை குறித்து முடிவு செய்ய மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.03 % குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.ஆர்.செல்லக்கண்ணு ஆத்தூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர் நோக்கி நகர் மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.2737/2023/இ1)

26. ஆத்தூர் நகராட்சி பொறியாளர் அவர்களின் ஆகஸ்ட் 2023ம் மாதத்திய நாட் குறிப்பினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு– மன்றம் பதிவு செய்யலாம்

27. ஆத்தூர் நகராட்சி ஆணையாளர் அவர்களின் ஆகஸ்ட் 2023ம் மாதத்திய நாட் குறிப்பினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு–மன்றம் பதிவு செய்யலாம்.

27/09/2023

தலைவர்.

ஆத்தூர் நகர்மன்றம்.

27/9/23